# குறுந்தொகையில் பெண் வாயில்களின் ஆளுமைப் பண்புகள்

**வி.கவிதா[1] & முனைவர். அ. இருதயராஜ்[2]**

[1]முனைவர் பட்ட ஆய்வாளர், [2] (நெறியாளர்) உதவி பேராசிரியர்.

**தமிழ்த்துறை, மொழிகள் புலம்,**

**வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம்**

**பல்லாவரம் சென்னை – 600 117.**

kavithavenkatesan12@gmail.com

11

**ஆய்வுச்சுருக்கம்**

எட்டுத்தொகை நூல்களுள் நல்ல என்ற அடை மொழியுடன் சிறப்புற்று விளங்கும் நூல் குறுந்தொகை ஆகும். அகப்பொருள் இன்பத்தின் சிறப்பை பற்றி அழகாய் எடுத்துரைக்கும் நூல் இது என்பதில் ஐயமில்லை. தலைமக்களாய் விளங்கும் தலைவனும் தலைவியும் தங்களுடைய காதல் எனும் களவு வாழ்வையும் இல்லறம் கற்பு வாழ்வையும் நெறிமுறையோடு வாழ துணை புரியும் வாயில்கள் குறித்து குறுந்தொகை எடுத்துரைக்கிறது.

**ஆய்வுநோக்கம்**

சங்ககாலம் தொட்டு இக்காலம் வரையிலும் பெண்கள் பன்முக ஆளுமைத் திறன் கொண்டவர்களாகவும், உயரிய ஆளுமையின் அடையாளமாகவும், நுட்பமான அறிவுடையவர்களாகவும், தனித்துவம் பெற்றவர்களாகவும் விளங்குகின்றனர் என்பதில் மிகையில்லை எனலாம். அவ்வாறான பெண் வாயில்களின் பலதரப்பட்ட ஆளுமைப் பண்புகளை குறுந்தொகை வாயிலாக அறிவதே இவ்வாய்வின் நோக்கமாகும்

**திறவுச்சொற்கள்:**

ஆளுமை - இல்லறம் - வாயில்கள் - தலைமக்கள் - தோழி – செவிலித்தாய்

**முன்னுரை**

ஆளுமை என்பது ஒருவரின் ஒருங்கமைந்த பண்புகளையும், அவைகள் தோற்றுவிக்கும் நடத்தையையும் குறிப்பதாகும். Personality என்னும் ஆங்கில சொல்லில் இருந்து தோன்றியதே ஆளுமை எனும் தழிழ் வார்த்தையாகும். ஆளுமை என்பதை தனி மனிதர்களின் ஒட்டுமொத்தப் பண்புத் தொகுதி எனலாம்.

சங்ககாலம் தொட்டு இக்காலம் வரையிலும் பெண்கள் பன்முக ஆளுமைத் திறன் கொண்டவர்களாகவும், உயரிய ஆளுமையின் அடையாளமாகவும், நுட்பமான அறிவுடையவர்களாகவும், தனித்துவம் பெற்றவர்களாகவும் விளங்குகின்றனர் என்பதில் மிகையில்லை எனலாம். அவ்வாறான பெண்களின் பலதரப்பட்ட ஆளுமைப் பண்புகளை குறுந்தொகை வாயிலாக ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**வாயில்கள் என்பதன் பொருள்:**

களவிலும், கற்பிலும் தலைவன் தலைவிக்கு துணை நிற்பவர்கள் வாயில்கள் ஆவர். சங்க இலக்கியத்தில் வரும் ஊடல் தீர்க்கும் வாயில்களாக குறிப்பிடப்படுவோர் பன்னிருவர் ஆவர். தொல்காப்பியர் இந்த வாயில்கள் யாவர் எனப் பட்டியலிட்டுக் காட்டுகிறார்.

**தோழி தாயே பார்ப்பான் பாங்கன்**

**பாணன் பாடினி இளையர் விருந்தினர்**
**கூத்தர் விறலியர் அறிவர் கண்டோர்**
**யாத்த சிறப்பின் வாயில்கள் என்ப**

**(தொல்காப்பியம் - 52)**

என்ற நூற்பா வழி வாயில்கள் பற்றி அறியலாம். தலைவன் தலைவி இருவரும் இணைந்து இல்லறம் நடத்தும் போது இடையில் பிற பெண்களாலோ, ஊராரினாலோ குறுக்கீடு ஏற்படுவதுண்டு. குறிப்பாக தலைவனுடன் காதல் பாராட்டுகிற அல்லது காமம் பூண்டு பழகும் பரத்தையர், தலைமக்களது இல்லறத்தில் குறுக்கிடுவர். இதனால் தலைமக்களிடையே சிக்கல் ஏற்படும்.

தலைவன் மீது தலைவி ஊடல் கொள்வதும் பின்பு ஊடல் தீர்க்கும் வாயில்கள் மூலம் அந்த சிக்கல் தீர்வதுமான நிகழ்வுகளை சங்க இலக்கியத்தின் வழி அறியலாம்.

**தோழியின் ஆளுமைப் பண்புகள்:**

தோழி என்றச் சொல்லுக்கு நம்பிக்கைக்கு உகந்தவள் என்பது பொருளாகும். தோழியானவள் இகுளை, பாங்கி, சிலந்தி, இணங்கி, துணைவி, சேடி, சகி என்றுப் பல பெயர்களால் அழைக்கப்பட்டாள். சங்க இலக்கியத்தில் தோழியின் அறிவுச் சிறப்பும், செயல்திறனும் காட்டப்படும் அளவிற்கு அழகுச் சிறப்பு அதிகமாக காட்டப்படவில்லை. தலைவனும் தலைவியும் விளிக்கின்ற நிலையிலேயே அவளழகு அறியப்படுகிறது. தலைவன் தலைவியின் களவு, கற்பு என்னும் இருபாற்பட்ட காதல் வாழ்க்கையில் இயற்கைப் புணர்ச்சி தொடங்கி இல்லற வாழ்க்கையில் சிறந்தது பயிற்றல் வரை பல நிகழ்வுகளின் வழி அவர்தம் உணர்வுகளும், செயல்களும் பண்பு நலன்களும் தோழி என்னும் முதன்மை வாயில்கள் மூலம் புலப்படுத்தப்பட்டுள்ளதை அறியமுடிகிறது.

**தலைமக்கள் வாழ்வில் அக்கறையாயிருத்தல்:**

தலைமக்கள் வாழ்வில் தாய்க்கு நிகராக அக்கறை செலுத்துபவளாக தோழி விளங்குகிறாள். களவு வாழ்வில் தலைவிக்கு நேரும் இற்செறிப்பு, நொதுமலர் வரைவு, வரும் வழியருமை, அச்சம் போன்ற இடர்பாடுகளை விளக்கி விரைவில் மணம் முடிக்குமாறு தலைவனை அறிவுறுத்துகிறாள். "வரைவு கடாதல்" தோழியால் மட்டுமே நடைபெறுகிறது.

**வேரல் வேலி வேர்க்கோட் பலவின்**
**சாரல் நாட செவ்வியை ஆகுமதி**
**யாரஃ தறிந்திசி னோரே சாரல்**
**சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கி யாங்கிவள்**
**உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே.**

**-குறு.- கபிலர்**

இரவுக் குறிக்கண் தலைவனை எதிர்ப்பட்ட தோழி, தலைவியின் நிலைக் கூறி அவளை மணம் செய்து கொள்ள வேண்டுவதாக இப்பாடல் அமைகின்றது. சிறு கொம்பு எனத் தலைவியின் இளமையும் மென்மையும் உணர்த்தப்பட்டன. "உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே" என்ற தொடரால் காமம் என்பது உள் தோன்றி வளரும் உணர்வு என்று தலைவனுக்கு புரியவைத்து தலைவியை விரைந்து மணம் முடிக்குமாறு வேண்டுகிறாள் தோழி. தலைவியின் காதலை ஊரார் அறியாமல் அயலாரிடமிருந்து காப்பாற்றி தலைவனுடன் வரைவிற்கு வழி செய்யும் தலைவியின் மறைமுக ஆளுமை பண்பு சிறப்பிற்குரியதாகும்.

**தோழியின் அறிவுத்திறன்:**

ஆளுமையில் அறிவுத்திறன் ஒரு முக்கியமான அமைப்பாகும். ஒரு மனிதனின் ஆளுமை

வெளிப்படுத்தும் முக்கிய காரணி அறிவுத்திறனாகும். அனைத்து மனிதர்களுக்கும் ஒரே மாதிரியான அறிவுத்திறன் இருப்பதில்லை. அவரவர் தன்மைக்கேற்ப அறிவுத்திறன் வேறுபடுகிறது.

அவ்வகையில் தலைவன் தலைவிக்கு இடையே ஏற்படுகின்ற காதலை மெல்ல மெல்ல நகர்த்தி செல்லும் பொறுப்பும் அறிவுத்திறனும் தோழிக்கே உரியதாகிறது. தோழி தன் அறிவுத் திறனால் சந்திக்க இயலாத காதலர்களை சந்திக்க வைக்கிறாள். தோழியின் அறிவுக்கூர்மை பல்வேறு வகைகளில் தலைவன், தலைவிக்கு பாலமாக அமையும். தொடர்ந்து வளர்ந்த காதல் சில இடையூறுகளால் சிக்கலடையும் போது அதை வெற்றிகரமாக முடித்து வைக்கும் அறிவுத்திறன் தோழிக்கே உண்டு என்பதை

**அகவன் மகளே! அகவன் மகளே!**
**மனவுக் கோப்பு அன்ன நல் நெடுங்கூந்தல்**
**அகவன் மகளே! பாடுக பாட்டே!**

தலைவி தலைவனை சந்திக்க இயலாமல் துன்பப்பட்டு, துயரத்துடன் இல்லத்தில் இருக்கின்ற போது நற்றாய், செவிலித்தாய் இருவரும் வெறியாட்டுக்கு ஏற்பாடு செய்கிறார்கள். வெறியாட்டலின் ஒரு பகுதியாக "குறிகேட்டல்" நிகழ்வு நடைபெறுகிறது. குறிகேட்டல் நிகழ்வில் "கட்டுவிச்சியிடம்" தலைவியின் காதலை அறிவுப்பூர்வமாக வெளிப்படுத்துகின்ற திறன் தோழிக்கே உரியது. அத்தன்மையை கபிலர் "அகவன் மகளே" என்ற மேற்காண் பாடலில் தெளிவுபடுத்தியுள்ளார். மேலும் இப்பாடலில் "பாடுக பாட்டே இன்னும் பாடுக பாட்டே அவர்" என்னும் தொடரில் "அவர்" என்ற ஒரு வார்த்தையில் தோழி கட்டுவிச்சியை குறித்து கூறும்போது குறிஞ்சி நாட்டுத் தலைவனை தலைவி காதலிக்கிறாள், இருவரும் சந்திக்க இயலாததால் பசலை நோயினால் அல்லல் படுகிறாள் என்று நற்றாயிடமும், செவிலித்தாயிடமும் குறியிடம் சொல்லி குறிப்பால் தெரிவிப்பார் தோழி.

**"உறுகண் ஓம்பல் தண்ணியில் பாகலின்**
**உரியதாகும் தோழிகண் உரனே" - தொல்**

தோழியானவள் தலைவியின் அகமும், புறமும் இருக்கும் உண்மை நிலையினைச் செம்மையாக அறிந்துக் கொள்ளும் திறன் உடையவள். தனது சொல்லாற்றலால் தலைவன் தலைவியை நெறிப்படுத்திச் சென்று அவர்களிடம் மன உறுதியையும் சிறந்த பண்பாட்டையும் வளர்த்து சிறந்த நெறியாளராகவும் செயல்படுகிறாள். சூழ்நிலையை சமாளித்தல், தோல்வியில் துவலாதிருத்தல், இன்ப துன்பங்களை சமமாக ஏற்றல் போன்ற அறிவுத்திறன் மிகுந்த சிறப்பான ஆளுமை கொண்டவளாக குறுந்தொகை பாடலில் வலம் வருகிறாள் தோழி.

**தலைமக்கள் வாழ்வில் செவிலித்தாய்:**

தலைவிக்கு உற்றத் துணையாக விளங்கும் தோழியை பெற்றெடுத்தவள் செவிலித்தாய் ஆவாள். தலைவியின் நலனில் தன் மகள் மீதான அக்கறையை விடவும் பெரிதும் அக்கறை கொண்டவள். நற்றாயை விடவும் தலைவியின் அசைவுகளை கூட கண்காணிக்கும் அளவிற்கு பொறுப்பு மிகுந்தவள். தலைவி களவு வாழ்க்கை மேற்கொண்ட வழி அறத்தொடு நின்று தன் பணியை செவ்வனே ஆற்றுகிறாள்.

தலைவனுடன் உடன்போக்கு மேற்கொண்டு களவு வாழ்விலிருந்து கற்பு வாழ்விற்கு அடியெடுத்து வைக்கிறாள், தலைவி. தன்னை அறிந்த செவிலித்தாயானவள் இல்லற வாழ்வென்பது என்னெவென அறியாத தன் மகள் எவ்வாறு தன் தலைவனுடன் இன்புற்று வாழ்வாளோ என அச்சம் கொள்கிறாள் என தலைவி வாழும் மனைக்குச் சென்று அவள் அறியாமல் தலைவி நடத்தும் குடும்ப

அழகைக் கண்டு ரசிக்கும் செவிலித் தாயின் அன்புள்ளம் குறித்து பின்வரும் குறுந்தொகைப்பாடல் விளக்குகிறது.

**முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்**
**கழுவுறு கலிங்கங் கழாஅ துடீஇக்**
**குவளை யுண்கண் குய்ப்புகை கழுமத்**
**தான்றுழந் தட்ட தீம்புளிப் பாகர்**
**இனிதெனக் கணவ னுண்டலின்**
**நுண்ணிதின் மகிழ்ந்தன் றொண்ணுதல் முகனே.**

**- குறு. 167**

தலைவி இல்லறம் நிகழ்த்தும் சிறப்பினை நேரில் கண்டறிந்து வந்த செவிலித்தாய் நற்றாய்க்கு உரைப்பதாக இப்பாடல் அமைந்துள்ளது. நன்றாகக் காய்ச்சிய பாலில் உறை ஊற்றிப்பெற்ற முற்றிய தயிரை தலைவி தன் காந்தள் மலர் போன்ற மெல்லிய விரல்களால் பிசைந்து குவளையைப் போன்ற மையுண்ட கண்களில் தாளிப்பானது புகை நெருங்கிபடர இனிய புளிச் சுவையுடைய குழம்பினைத் தலைவி தானே துழாவிச் சமைக்கிறாள். அழுக்குற்ற அவ்விரல்களைத் தான் உடுத்தியிருந்த தூய ஆடையில் துடைத்துக் கொண்டு அப்படியே அள்ளி உடுத்திக் கொண்டனள். தான் சமைத்த உணவைக் கணவன் உண்டர்கண், 'இனிது' என்று புகழ்ந்து கூறிய அளவில் ஒள்ளிய நெற்றியுடைய அவள் முகம் பிறர் அறியாத வண்ணம் தனக்குள் நாணமுற்று மகிழ்ந்தது. இதனை அயன்மையிலிருந்து பார்த்துக் கொண்டிருந்த செவிலித்தாய் மிகவும் மகிழ்வுற்று தான் பார்த்தவற்றை அப்படியே தலைவியின் தாயான நற்றாயிடமும் கூறி இருவருமே உளம் பூரித்து மகிழ்கின்றனர்.

இவ்வாறாய் தலைவியின் வாழ்வில் முழுமையான அன்பையும், அக்கறையையும் நேரடியாகவும், மறைமுகமாகவும் வெளிப்படுத்தும் செவிலித்தாயின் ஆற்றல் சிறந்த ஆளுமைப்பண்பாக பார்க்கப்படுகின்றது.

**முடிவுரை:**

பெண்கள் இல்லத்தை நிர்வகிக்கக்கூடியவர்களாக ஆண்மக்களை நல்வழியில் வளர்த்து அவர்களை நாட்டிற்கும் சமுதாயத்திற்கும் கடமையாற்றும் திறன்மிக்கவர்களாக மாற்றும் அதீத பொறுப்பு கொண்டவர்கள். ஆண்கள் போர் மற்றும் வெளிவேலைகள் காரணமாக வெளியே செல்ல அனைத்தையும் கவனிக்கும் பொறுப்பு பெண்களிடம் இருந்தது. அவர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட பொறுப்பை செம்மையாக செய்தனர். போர், தொழில் தவிர ஏனைய அனைத்து களங்களிலும் பெண்கள் ஆளுமை செலுத்தியதை சங்க இலக்கியங்கள் உணர்த்துகிறது.

**துணைநூற்பட்டியல்:**

1. குறுந்தொகை மூலமும் உரையும் (புலியூர் கேசிகன் உரை)
2. தொல்காப்பியம் (எழுத்து, சொல், பொருள்) இளம்பூரனர் உரை.
3. சங்க இலக்கியம் தொகுப்பு 2, சென்னை பல்கலைக்கழகம்(1995)
4. அகப்பொருள் பாடல்களில் தலைவி முனைவர் ஈ.கோ.பாஸ்கரதாஸ்
5. குருகும் உண்டு – பிரகஸ்பதின்.